வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

## 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்

### வங்கி உத்தாரவாதம் அல்லது முறிகள், கொடுகடனின் துணைநில் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் செலாவணியில் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புக்கள்) ஒழுங்குவிதிகள் (மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான ஒழுங்குவிதிகள்) மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் பிரிவு 9(2)இன் நியதிகளில், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக விளங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், வங்கி உத்தரவாதங்கள், முறிகள், கொடுகடனின் துணைநில் கடிதங்கள் என்பனவற்றை வழங்கவும் புதுப்பிக்கவும் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்யவும் பின்வருவனவற்றிற்குட்பட்டு அனுமதிக்கப்பட்டன.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அடிப்படை கொடுக்கல்வாங்கல்களை (கேட்டுக் கொள்ளப்பட்டவாறு) நிரூபிக்கும் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இது சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளில் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலாக இருத்தல் வேண்டும்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் வழங்கப்படவுள்ள உத்தரவாதங்களிலிருந்து தோன்றக்கூடிய ஏதேனும் எதிர்பாராத பொறுப்பினை ஈடுசெய்வதற்காக கம்பனியின் நிதியியல் வலுவினை மதிப்பிட்டு உறுதிப்படுத்துதல் வேண்டும்.

4. பின்வருவனவற்றை வழங்கும் சந்தர்ப்பத்தில்;

4.1 முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள்,

(அ) உத்தரவாதத்தின் பெறுமதி, இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து இலங்கையில் வதியும் ஆளொருவரினால் பெறப்பட்ட முற்பணக் கொடுப்பனவின் பெறுமதியிலும் பார்க்கக் குறைவானதாக அல்லது சமமானதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) உத்தரவாதமானது, இலங்கையில் வதியும் ஆளொருவரின் இலங்கையிலுள்ள கணக்கிற்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவரிடமிருந்து முற்பணக் கொடுப்பனவு பெறப்பட்டமையின் பின்பு மாத்திரமே அது வலுவுடையதாகும் என்ற நிபந்தனையினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

4.2 செயலாற்ற முறியானது ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதனை நிரூபிப்பதற்கும் அதில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4.3 விலைக்குறிப்பீட்டு முறி, இது விலைக்கோரல் அல்லது விலைக்குறிப்பீட்டில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

5. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இதே நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்தும் உத்தரவாதத்தைப் பெறவில்லை என்பதனை நிரூபிக்கும் விதத்தில் கம்பனியிடமிருந்து சத்தியக்கடதாசியொன்றினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக விளங்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மேற்கொள்ளப்படவுள்ள அடிப்படைக் கொடுக்கல்வாங்ல்களின் சட்டபூர்வத் தன்மையினையும் நம்கத்தன்மையினையும் நிறுவுவதற்காக சரியான சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணச்சான்றுகளை (கேட்டுக் கொள்ளப்பட்டவாறு)

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

பெற்றுக்கொள்ள வேண்டியதுடன், இப்பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் தவிர இப்பணிப்புரைகளில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

7. செல்லுபடியாகும் கோரல்கள்

7.1 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களின் நம்பகத்தன்மை தொடர்பில் திருப்தியடைந்தமையினைத் தொடர்ந்து முன்னர் குறிப்பிடப்பட்ட அரச வர்த்தமானியில் அனுமதிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்கள், முறிகள், துணைநில் நாணயக் கடிதங்கள் மற்றும் கம்பனி உத்தரவாதங்கள் தொடர்பிலான செல்லுபடியாகும் கோரல்களிலிருந்து எழும் வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

7.2 உத்தரவாதமொன்றின் கீழ் செல்லுபடியாகும் கோரலின் உயர்ந்தபட்சத் தொகை, குறிப்பிட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வெளிநின்ற கடப்பாட்டின் விகிதத்திற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயரில் (அதாவது முதலீட்டினை ஏற்றுக்கொள்பவர்) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் சார்பில் (அதாவது முதலீட்டாளர்) வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் கோரல் காணப்படும் சந்தர்ப்பத்தில், கோரலின் உயர்ந்தபட்சத் தொகை, கோரல் நேரத்தில் வெளிநின்ற கடப்பாடுகளின் முதலீட்டிலுள்ள முதலீட்டாளரின் பங்குடமையின் விகிதசமமாக அல்லது அதற்கும் குறைவானதாக இருத்தல் வேண்டும்.

8. **வெளிநாட்டுச் செலவாணித் திணைக்களத்திற்கு அறிக்கையிடல்:** இணைப்பு Iஇல் உள்ளவாறு மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பான ஒழுங்குவிதிகளில் அனுமதிக்கப்பட்டவாறு, அதிகாரமளிக்கப்பட்ட வணிகராகவுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட உத்தரவாதம் தொடர்பான காலாண்டு அறிக்கையினை அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். அறிக்கையின் ஸ்கான் பிரதியை dfem@cbsl.lk ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர் - வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2017 நவெம்பர் 20**

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

**இணைப்பு I**

**உத்தரவாதங்கள் மீதான அறிக்கை**

**அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்:** ......................................................................................

**ஆண்டு/ காலாண்டு:** ......................................................................................

1. **உத்தரவாதங்கள்**

| வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் எண்ணிக்கை | இளைப்பாறிய உத்தரவாதங்களின் எண்ணிக்கை | வெளிநின்ற பெறுமதி |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

2. **கோரல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளிமுகப் பணவனுப்பல்களின் விபரங்கள், ஏதுமிருப்பின்**

| கம்பனியின் பெயர் | பணவனுப்பலின் திகதி மற்றும் தொகை | கோரலின் தன்மை | உத்தரவாதத்தின் வகை (கம்பனி/ முற்பணக் கொடுப்பனவுகள் / துணைநில் நாணயக் கடிதம் போன்றவை) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் துல்லியமானவையுமென நான் உறுதிப்படுத்துகின்றேன்

..................................                                ..................................................................................................

திகதி                                அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம்